# குருநாகல் மாநகர சபை
# குருநாகல் மாவட்டம்

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 14 ஆந் திகதி மாநகர சபையின் நகர பிதா உட்பட நகர மந்திரிமார்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் குருநாகல் மாநகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சம்பத் பியச பெயருடய திண்மக் கழிவுப் பொருள் கொள்வனவு நிலையத்திற்குரிய இலாப நட்டக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டு வேறாக இலாபத்தைக் கணிப்பிடல் கொள்கையொன்றாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்ககளில் அதன் தேறிய இலாபமான ரூபா 213,569 ஆன தொகை சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 28,980 தொகையான இறுதி இருப்பு மற்றும் ரூபா 684,402 ஆன காசு மற்றும் வங்கி மீதி ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) திரண்டிய நிதி மற்றும் மிகை/ பற்றாக்குறைகள் கணக்கிற்காக முன்னைய ஆண்டுகளின் கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தாக செய்யப்பட்ட சீராக்கங்கள் நாட்குறிப்பின் மூலம் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நாட்குறிப்புக்கள் பயன்படுத்தப்படாமல் நேரடியாக திரண்ட நிதியத்திற்கும் மிகை/பற்றாக்குறை கணக்கிற்கும் ரூபா 5,678,024 வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 11,644,089 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டிற்காக 2015 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 162,000 ஆன நீதிமன்றத் தண்டப்பம் மற்றும் ரூபா 28,715,649 ஆன சம்பள மீள்நிரப்பல்கள் மீளாய்வாண்டின் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பல்களின் பெறுமதி ரூபா 45,277,188 ஆக இருந்த போதிலும், அது பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்குரிய உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய சம்பள நிதியத்தின் பங்களிப்புத் தொகை ரூபா 1,801,556 ஆக இருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 2,101,816 தொகை ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால்

ஆண்டின் செலவினம் ரூபா 300,260 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே இந்நிதியத்திற்கு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 50,819,736 ஆன நிலுவை தொகை கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரஜபிஹில்ல வாடி வீட்டை குத்தகைக்கு வழங்குவதற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 753,000 ஆன வாடகை மற்றும் வேஹர வியாபார கடைத்தொகுதியின் A பகுதியை குத்தகைக்கு வழங்குவதற்ாக 2015 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய ரூபா 522,500 ஆன வாடகை நிலுவை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய ரூபா 208,595 ஆன கேள்வி வைப்புக்கள் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2014 ஆம் ஆண்டிற்காக 2015 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 3,650,000 ஆன பஸ் நிறுத்துமிட நிலையத்தின் மலசலகூடக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்ததன் பேரில் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 136,374 ஆன தண்டப்பணம் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2015 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி (NBT) தொகை ரூபா 177,150 ஆக இருந்த போதிலும், அது கடன்கொடுத்தோராக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது நன்கொடையாகக் கிடைத்த இரண்டு வாகனங்களின் பெறுமதியான ரூபா 13,750,000 பெறுமதியான 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஓ) 2015 ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரியாக நகர சபயால் அறவிடப்பட்ட ரூபா 24,052,395 பெறுமதியான தொகை ஆண்டின் வருமானமாக ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை மற்றும் ஆண்டில் பெறுமதி சேர் வரியாக நகர சபையால் செலுத்தப்பட்ட ரூபா 13,278,573 தொகை ஆண்டின் செலவினமாக மானியங்கள், பங்களிப்பு தொகை மற்றும் நிவாரணக் கொடுப்பனவு செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் பேரில் ஆண்டின் வருமானம் ரூபா 24,052,395 மற்றும் ஆண்டின் செலவினம் ரூபா 13,278,573 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட மீதிகள் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளிடையே ரூபா 125,681,712 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக்களாக அறிக்கையிடப்பட்டுள்ள மீதிகள் மற்றும் வைப்பு பதிவேடுகளின் மீதிகள் கூட்டுத்தொகைக்கு இடையே ரூபா 14,008,258 ஆன வேபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 128,732,188 ஆக காணப்பட்டது. அவற்றில் 5 சதவீதம் அதாவது ரூபா 6,948,938 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளாக இருந்தன.

(ii) அறவிடப்பட வேண்டிய பயன்படு சேவை மீதிகளின் பெறுமதியில் 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான வருடங்களில் 21 மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய ரூபா 820,734 ஆன மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 151,064,750 ஆக இருந்துடன், அவற்றில் 35 சதவீதம் அதாவது ரூபா 53,605,891 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளாக இருந்தன.

(ii) மீளச் வேண்டிய ரூபா 67,819,473 வைப்பு பெறுமானத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 8,883,234 ஆன நானாவித வைப்புக்கள் மீதிகளும் ரூபா 631,193 தொகையான வைப்பு மீதிகளும் இருந்தன.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 348,381,329 தொகையான 14 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் உருவான முறை காண்பிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 198,984,605 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 85,019,489 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 113,965.116 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 59,943,029 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 195,086,307 ஆன மூலதன செலவுகளை சீராக்கம் செய்யும் போது போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 63,841,327 ஆன மிகை ஒன்றாக மாறியுள்ளது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | வருமானம் 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | செலவினம் 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 308,709 | 279,748 | 28,961 | தனிப்பட்ட வேதனம் | 253,044 | 181,657 | 71,387 |
| (ii) | ஏனையவை | 300,873 | 167,697 | 133,176 | ஏனையவை | 157,553 | 180,769 | (23,216) |
| | உப மொத்தம் | 609,582 | 447,445 | 162,137 | உப மொத்தம் | 410,597 | 362,426 | 48,171 |
| (iii) | மூலதன வருமானம் | 59,943 | 15,368 | 44,575 | மூலதன செலவினம் | 195,086 | 88,273 | 106,813 |
| | மொத்தம் | 669,525 | 462,813 | 206,712 | மொத்தம் | 605,683 | 450,699 | 154,984 |
| | செயற்பாட்டு விளைவு | 198,985 | 85,019 | 113,966 | பற்றாக்குறை | 63,841 | 12,114 | 51,727 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 609,581,435 தொகையில் 49 சதவீதமான அதாவது ரூபா 300,873,032 தொகை சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளைக் கொண்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 79 சதவீதத்தை எடுத்திருந்தது.

(இ) மூலதன வருமானமாகிய ரூபா 59,943,029 ஆன மொத்தத் தொகையில் 71 சதவீதம் அதாவது 42,515,664 மற்றும் மூலதனச் செலவவான ரூபா 195,086,307 அளவில் 22 சதவீதம் அல்லது ரூபா 42,515,664 தொகை நன்கொடையாக கிடைத்த வாகனங்களின் பெறுமதியுடன் கூடியதாக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 410,596,830 தொகையில் 62 சதவீதமான அதாவது ரூபா 253,043,682 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 85 சதவீதமான அதாவது ரூபா 215,070,903 ,645,665 சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சபைகளின் 03 வங்கிக் கணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 21 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 721,552 ஆன இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் 04 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 40,538 ஆன ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் காசாக்கப்படாத பெறுவனவு மீதிகளும் காணப்பட்டன.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப் பட்டது | 2014 உள்ளவாறான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 150,736 | 163,319 | 85,971 | 142,500 | 141,376 | 73,209 |
| (ii) குத்தகை வாடகை | 70,677 | 66,633 | 5,290 | 69,475 | 63,561 | 4,132 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 8,405 | 12,082 | - | 7,855 | 11,199 | - |
| (iv) ஏனைய வருமானம் | 324,411 | 367,547 | 30,264 | 283,910 | 231,307 | 23,431 |
| மொத்தம் | 554,229 | 609,581 | 121,525 | 503,740 | 447,443 | 100,772 |

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் அதன் பேரில் நிலுவையாக இருந்த வருமானம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | வருமான சேகரிப்பு பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | நிலுவை மீதி பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 73,209 | 150,789 | 223,998 | 23,744 | 117,933 | 141,677 | 53,115 | 32,856 | 85,971 |
| வாடகை | 4,132 | 66,633 | 70,765 | 3,709 | 61,766 | 65,475 | 423 | 4,867 | 5,290 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 12,082 | 12,082 | - | 12,082 | 12,082 | - | - | - |
| ஏனைய வருமானம் | 23,431 | 367,547 | 390,978 | 81,189 | 337,283 | 418,472 | - | 30,264 | 30,264 |
| மொத்தம் | 100,772 | 597,051 | 697,823 | 108,642 | 529,064 | 637,706 | 53,538 | 67,987 | 121,525 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வீத வரி**

--------------

மீளாய்வாண்டிற்காக 12 வட்டாரங்களின் கீழ் ரூபா 67,915,802 வீதவரி வருமானம் பட்டியலிடப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 திகதியில் அதில் 52 சதவீதம் அதாவது ரூபா 35,421,685 ஆன நிலுவையொன்று காணப்பட்டது. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 40,000 இற்கு மேற்பட்ட நிலுவை காணப்படுகின்ற 56 வீதவரி அலகுகளுக்குரிய ரூபா 3,920,346 ஆன நிலுவையொன்று காணப்பட்டது.

**(ஆ) நீர் வருமானம்**

-----------------------

ஆண்டிற்கான நீர் பட்டியலிடல் ரூபா 85,058,589 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரை மொத்தமாக 58 சதவீதமான அதாவது ரூபா 49,154,524 ஆன நிலுவை ஒன்று காணப்பட்டது. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவை காணப்படுகின்ற 115 நீர்ப்பாவனையாளர்களுக்குரிய ரூபா 26,967,499 தொகை காணப்பட்டதுடன் அம்மொத்த நிலுவையில் 53 சதவீதமாக இருந்தது. அவ்வாறே 04 பாவனையாளர்களுக்குரிய நகர ஆணையாளராக பட்டியலிடப்பட்ட ரூபா 3,595,039 நிலுவையும் 5163 ஆம் இலக்க பாாவனையாளரின் கீழ் குருணாகல் போதனா வைத்தியசாலைக்குரிய ரூபா 7,489,001 நிலுவையும், 6747 ஆம் இலக்கத்தின் வில்கொடை வீதி பொது நீர் குழாய்க்குரிய ரூபா 2,312,762 ஆன நிலுவையும் காணப்பட்டன.

**(இ) வாடகை**

-----------------

மீளாய்வாண்டின் இறுதியில் குருநாகல் நவீன கடை தொகுதி கட்டிடத்தின் 55 கடைகள் தொடர்பாக ரூபா 472,762 இற்கான வாடகை மற்றும் ரூபா 188,987 இற்கான சேவைக் கட்டண நிலுவை ஒன்று காணப்பட்டது. அதே போல் குருநாகல் நவீன பஸ் நிலையத்தின் 85 கடைகள் தொடர்பாக நிலுவையாக காணப்பட்ட கடை வாடகை ஒரே தடவையில் செலுத்தப்பட்ட பணம் (கீமணி) மற்றும் வட்டி ரூபா 2,139,238 ஆக இருந்தது.

**(ஈ) நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

------------------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன முறையே ரூபா 501,100 தொகையும் ரூபா 26,790,797 தொகையுமாகும்.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

-----------------------------------------------------

நானாவிதமாக வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 4,996,245 பெறுமதியான வைப்புக்கள் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக வெவ்வேறு தரப்பினரிடமிருந்து கிடைக்கப் பெற்ற மானியங்களாக இருந்ததுடன் அந்நிதியம் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் வைப்புக்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

------------------------------------------------------

2008 யூலை 01 ஆந் திகதி முதல் 2013 யூன் 30 ஆந் திகதி வரை 05 ஆண்டுகளுக்கு பஸ் நிலைய பொது மலசலகூட வருமானத்தை சேகரிக்கும் ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் குத்தகை காலத்தின் இறுதியில் வாடகையாக ரூபா 1,193,630 மற்றும் நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 2,900,000 தொகை அறவிட வேண்டியிருக்கையில் கேள்வி கோரப்படாமல் குறித்த நிறுவனத்திற்காக எதிர்வரும் 05 ஆண்டுகளுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. முன்னைய 5 ஆண்டுகளின் போதும் குறித்த அறவீடுகள் முறைப்படி சபைக்கு வழங்கப்படாதிருக்கையில் மீண்டும் கேள்வி

கோரியதன் பேரில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்க்கட்டணங்களுடன் உரிய நிலுவைத் தொகை ரூபா 3,405,213 ஆக இருந்தது.

### 3.3 பதவியணியினர் நிர்வாகம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் காவலாளிகளின் எண்ணிக்கை 34 ஆக இருந்த போதிலும், 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்கள் உட்பட 64 காவலாளிகள் இருக்கையில் 03 அமையக் காவலாளிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது மாநகர சபை நிதியத்தில் இருந்து சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் இரண்டு மீண்டு வரும் செலவினங்களுக்குரிய ரூபா 11,757,806 ஆன மதிப்பீட்டு நிதிஏற்பாட்டினை மிகைத்து செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் கூட்டப்பட்டிருந்தது.

### 4.2.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 174,000 பெறுமதியான 02 வீதி தகர்த்திகளும் உழவு இயந்திரடெமான்றும் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்பட்டன.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்